நான் சொல்ல விரும்பவில்லை. தற்போது 100 கோடி ரூபாய்க்கு மேலாக முதலீடு செய்து வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு இன்னும் 10, 15 நாட்களில் காவிரி நதி நீர்ப் பிரச்சினை தீரவில்லை என்று சொன்னால், காவிரிப் பகுதியிலே தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொன்னால், நிச்சயமாக, மிகப் பெரிய கவலைக்குரிய நிலைமைகள் அந்த மாவட்டத்தில் ஏற்படும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆளுங்கட்சித் தரப்பிலும் சரி, எதிர்க் கட்சித் தரப்பிலும் சரி, இதை எவ்வளவு பொறுப்போடு பார்க்கிறீர்கள் என்பது எங்களுக்குக் கவலைக்குரிய விஷயம். பேசக்கூடிய ஒவ்வொரு கருத்தும் நாட்டு மக்களுக்குப் பத்திரிகைகள் வாயிலாகச் செல்கிறது. ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் பொதுமக்கள் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

7. அறிவிப்புகள்— தொடர்ச்சி

(இ) காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, ஓர் அறிவிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன். காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிற்பகல் நடைபெறவுள்ளது. கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் நிறைய உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று வருத்தப்படுகிறார்கள். அந்த வருத்தத்திலும் நியாயம் இருக்கிறது. நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நிலைமையைக் கொஞ்சம் கருத்திலேகொண்டு, திரு. பழனிசாமி அவர்களுக்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால்தான் முடியும். அவர் சென்ற பிறகு மற்ற தலைவர்கள் எல்லாம் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதுதான் இருக்கின்ற சூழ்நிலை. சூழ்நிலையை விளக்கிச் சொல்லியிருக்கிறேன். இதனால் பெரும்பாலும் பாதிக்கப் படக்கூடியவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள்தான். திரு. பழனிசாமி அவர்களுடைய உரைக்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் – ஏனென்றால், இது அவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை – முன்னாலே சென்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய

வேண்டியிருக்கிறது. ஆகவே உங்களுடைய பேச்சுக்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை பதில் சொல்ல அனுமதிக்கலாமா என்று நான் அவையினுடைய அனுமதியைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: எங்கள் உறுப்பினருக்கு 5 நிமிடங்கள் கொடுத்தால் போதும்.

(உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் இந்த பாதிப்பு இருக்கிறது. பெரும்பாலும் இதிலே ஆளுங்கட்சி உறுப்பினர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இறுதியில் நீங்கள் ஏதேனும் கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. பி.எம். நரசிம்மன்: தலைவர் அவர்களே, தினந்தோறும் நாங்கள் 7 சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கொடுக்கிறோம். அவர்களில் இரண்டு, மூன்று பேர்களுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள். திரு. பழனிசாமி அவர்கள் பேசி முடிக்கட்டும். பிறகு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தின் சார்பில் நீங்கள் 5 மணித்துளிகள் பேசி முடித்து விடுங்கள். பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை பதில் சொல்ல அனுமதிக்கலாம். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், ஏற்கெனவே உங்களுடைய கட்சியின் சார்பாகப் பேசியிருக்கிறார்கள். திரு. ரா. ஈஸ்வரன் பேசியிருக்கிறார். ஓர் இயக்கத்தின் சார்பாக சொல்லப்பட வேண்டிய கருத்துகள் சொல்லப்பட்டுவிட்டன. அனைத்துக் கட்சிக் கூட்டம் இருக்கிறது. அதுதான் பிரச்சினை. வேறு காரணம் எதுவும் இல்லை. பொதுப் பணித் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. திரு. பழனிசாமி அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு உங்கள் கட்சியின் சார்பில் 5 மணித்துளிகள் பேசி முடித்துவிடுங்கள்.

8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தினுடைய கால்வாய்களை நவீனப்படுத்துவதற்கு ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம்,